“அ” அட்டவணை

## விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களைத் தெரிவு செய்தல்

01. தகைமை:-

விவாக (பொது/கண்டிய) மற்றும் பிறப்பு, இறப்புப் பதிவாளர் பதவிகளுக்கும் மேலதிக விவாக மற்றும் பிறப்பு, இறப்புப் பதிவாளர் பதவிகளுக்கும் ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்கு ஆண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

02. வதிவிடம்:- விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுப் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. I. வயது:- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரருக்கு 21 வயது பூர்த்தியாகியிருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் 65 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

II. ஓய்வுபெறும் வயது:- உச்ச வயது எல்லை 70 வயது ஆகும்.

04. விவாக நிலை:- விண்ணப்பதாரர் விவாகமானவராக இருத்தல் வேண்டும்.

05. நடத்தை:- I. விண்ணப்பதாரர் நற்பண்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்காக கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட நடத்தை சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அப்பிரிவில் வசிக்கும் மதத் தலைவர்கள், வைத்தியர்கள், அதிபர்கள் அல்லது இளைப்பாறிய உயர் பதவிகளை வகித்தவர்களிடமிருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

II. தலைமைத்துவம்:

விண்ணப்பதாரர் பிரதேசத்தின் நலன்புரிச் சங்கங்கள், அரசியல் சார்பற்ற தன்னார்வ நிறுவனங்களில் வகித்த தலைமைத்துவப் பதவிகள் மற்றும் பிரதேச அபிவிருத்திக்காக வழங்கிய பங்களிப்புகள் தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்கள் அல்லது சான்றுகளைச் சமர்ப்பித்தல் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

04. குடியுரிமை:

விண்ணப்பதாரர் ஒரு இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். 'இலங்கை பிரஜை' என்பது பரம்பரை ரீதியாக அல்லது விசேட பதிவு மூலம் இலங்கைக் குடியுரிமை பெற்றவரைக் குறிக்கும்.

05. சொத்து விபரம்:

விண்ணப்பதாரர் கடன் சுமையற்றவராக இருத்தல் வேண்டும். காணிச் சொத்துக்கள் காணப்படுவது மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

06. அலுவலக அமைவிடம் :-

I. பிரிவில் உள்ள அனைவருக்கும் அல்லது பெரும்பான்மையான மக்கள் இலகுவாக வந்து செல்லக்கூடிய வகையில், பிரிவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தில் அலுவலகத்தை நிறுவுவதற்கான வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

II. வைத்தியப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள், அரச வைத்தியசாலை வழங்கியுள்ள இடத்தில் அல்லது அவ்வாறு இல்லையெனில், குறித்த அரச வைத்தியசாலையிலிருந்து 01 கி.மீ தூரத்திற்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வேறொரு கட்டிடத்தில் அல்லது தமது வீட்டில் அலுவலகத்தை நிறுவுவதற்கான வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

07. கல்வித் தகைமைகள் :-

I. <u>பிறப்பு, இறப்பு மற்றும் விவாக (பொது மற்றும் கண்டிய) பதிவாளர்:</u>

பதிவுப் பிரிவின் மக்கள் தொகையினது மொழித் தேவைக்கமைய, இரண்டாவது மொழியில் கடமையாற்றும் ஆற்றலுடன், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி உட்பட க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான அல்லது உயர் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும். (இரண்டு தடவைகளில் சித்தியடைந்திருப்பின், க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 06 பாடங்களுக்கு திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்).

II. <u>பிறப்பு, இறப்பு மேலதிக பதிவாளர்கள்:</u>

அ. பிரிவின் மக்கள் தொகையினது மொழித் தேவைக்கமைய, இரண்டாவது மொழியில் கடமையாற்றும் ஆற்றலுடன், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி உட்பட க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 06

பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான அல்லது உயர் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. விண்ணப்பதாரர் பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவப் பணியாளராக அல்லது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழை உடையவராக அல்லது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாளராக இருத்தல் வேண்டும்.

III. <u>முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள்:</u>

அ. பதிவுப் பிரிவின் மக்கள் தொகையினது மொழித் தேவைக்கமைய, இரண்டாவது மொழியில் கடமையாற்றும் ஆற்றலுடன், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி உட்பட க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. சிங்களம்/தமிழ் அறிவுடன் மௌலவி சான்றிதழ் அல்லது அரபு டிப்ளோமா தகைமையைக் கொண்டிருத்தல்.

<u>குறிப்பு :-</u>

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்குத் தேவையான குறைந்தபட்ச கல்வித் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் முன்வராத பட்சத்தில், குறைந்த கல்வித் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் தொடர்பில் பரிசீலிக்கப்படலாம்.

10. விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் :-

I. அரச அல்லது அரச சார்பற்ற திணைக்களங்களில் அல்லது தனியார் நிறுவனங்களில் முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் பணியாற்றுபவர்கள் அல்லது பதவி வகிப்பவர்கள்.

(உதாரணம்: கிராம உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மரண விசாரணை அதிகாரிகள், அரச அலுவலகப் பணியாளர்கள், தபாலதிபர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள்/செயலாளர்கள் மற்றும் ஏனைய பதவிகளை வகிப்பவர்கள்).

II. இலஞ்சம் அல்லது ஊழல், மோசடி நடவடிக்கைகள், வன்முறைச் செயல்கள், சமூக விரோதச் செயல்கள் அல்லது அரச எதிர்ப்புச் செயல்களில் ஈடுபட்டவர்கள்.

III. நீதிமன்றத்தினால் தண்டனை பெற்று சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள்.

IV. மதுபானம் விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள், மதுபானசாலை உரிமையாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், நகர சபை மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் போன்றோர்.

V. கட்டாய ஓய்வு அல்லது பொது விநியோகத்தின் கீழ் அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் (தாபன விதிக் கோவையின் II ஆம் பிரிவின் 7:3 ஆம் உப விதியைப் பார்க்கவும்).

VI. இலங்கைப் பிரஜை அல்லாதவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

11. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :-

பதிவாளர் நாயகத்தினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தலின் படி விண்ணப்பங்கள் கோரப்படும். வெற்றிடங்கள் நிலவும் பிரிவுகளில் மாவட்டப் பதிவாளர் / மேலதிக பதிவாளர் நாயகத்தினால் அந்தந்த மாவட்டங்களில் அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்படும். உரிய மாவட்டச் செயலகம் / பிரதேச செயலகம் அல்லது மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு விண்ணப்பப் படிவம் மாத்திரமே வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் அவற்றுக்குரிய சான்றிதழ்களின் பிரதம்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் மாவட்டப் பதிவாளர் / மேலதிக பதிவாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படுவதுடன், அது தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்படும்.

12. ஆட்சேர்ப்பு நடைமுறை :-

I. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் அந்தந்தப் பிரிவின் பிரதேச செயலாளரினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதன்போது அலுவலகத்தை அமைப்பதற்கான வசதி மற்றும் பிரதேசவாசிகளின் அங்கீகாரம் போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

II. குறித்த பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்ப் பட்டியல் அந்தந்தப் பிரிவுகளில் பகிரங்கப்படுத்தப்படுவதுடன், மேன்முறையீடுகள் இருப்பின் மாவட்டப் பதிவாளர் / மேலதிக பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சை சபை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் பரிந்துரைக்கப்படும்.

III. நேர்முகப் பரீட்சை சபையினால் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைப் பதிவாளர் நாயகம் பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிப்பார். கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், பதிவாளர் நாயகத்தினால் குறித்த பதவிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

தொகுதி/ 29 -MBD Registrars Ordinance